# PRIMARY SCHOOL

## SEMESTRAL ASSESSMENT 1 - 2014

## HIGHER MOTHER TONGUE – TAMIL

## PRIMARY 6 HMT

Name: ______________________ (     )    Date : __________

Class: P6 ________

Parent's Signature: ______________

Marks: ____ / 60

Total Time for this Booklet is 1 hr 20 mins

**Do not open the booklet until you are told to do so.**
**Follow all instructions carefully.**

ஆசிரியர் கூறுவதற்கு முன் கேள்வித்தாளைத் திறக்காதே! எல்லாக் கேள்விகளையும் கவனமாகப் படித்துப் பின் விடை அளிக்கவும்.

# PRIMARY SCHOOL

## SEMESTRAL ASSESSMENT 1 - 2014

## HIGHER MOTHER TONGUE – COMPOSITION

## PRIMARY 6 HMT

Marks:_____ / 40

Name :

Duration: 50 min

Class: P6 ( )

### தமிழ் - தாள் 1 (கட்டுரை)

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்றைத்** தேர்ந்தெடுத்து **150 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம்.

**வினா 1**

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

‘என் பெற்றோருக்குப் பெருமை தேடித் தந்த ஒரு சம்பவம்’

நீ உன் பெற்றோருக்குப் பெருமை தேடித் தரக் காரணமாக இருந்த சம்பவத்தைப் பற்றி விளக்கி எழுது.

**வினா 2**

**பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கதை எழுது.**

“ ஒரு நாள் நான் பெருவிரைவு ரயில் வண்டி நிலையத்தில் காத்துக் கொண்டிருந்தேன். வெகுநேரமாகியும் ரயில் வரவேயில்லை. என் மனம் ‘பட பட’ என்று அடிக்க ஆரம்பித்தது. ஏனென்றால்...

(முற்றும்)

## 'அ' பிரிவு

### A1 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.**

தமிழ் நாட்டில் கொண்டாடப்படும் முக்கியமான பண்டிகைகளுள் பொங்கல் பண்டிகையும் ஒன்று. பொங்கல் பண்டிகை முடிந்தபிறகு சில ஊர்களில் (Q1) **ஏற்படும்** வீர விளையாட்டுத்தான் மஞ்சு விரட்டு. இந்த விளையாட்டின்போது துணிவு (Q2) **மிகுந்து** இளைஞர்கள் முரட்டுக் காளைகளை அடக்குவார்கள்.

இந்த விளையாட்டிற்காகக் காளைகள் (Q3) **பிடிக்கப்பட்டு** வளர்க்கப்படுகின்றன. அவை முரட்டுக் காளைகள். (Q4) **அதன்** கொம்புகள் மிகக் கூர்மையாகச் சீவப்பட்டிருக்கும். காளைகளின் சொந்தக்காரர்கள் அவற்றின் (Q5) **காலில்** மணியைக் கட்டி, மாலையிட்டு மஞ்சுவிரட்டு நிகழும் இடத்துக்குக்கொண்டு வருவார்கள். இந்த விளையாட்டைப் பெரும்பாலும் ஊருக்கு வெளியே நடத்துவார்கள்.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

A2 வாக்கியங்களை முடித்தெழுதுதல் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.

Q6. மாதவன் தன் ஓய்வு நேரங்களில் வயிலின் வாசித்து மகிழ்வான்.

மாதவன் தன்னை மகிழ்விக்க ____________________________

____________________________________________.

Q7. பண வசதி இல்லாததால், மாலதி படிப்பைத் தொடரமுடியவில்லை.

மாலதி தன் படிப்பைத் தொடர்ந்து ____________________________

____________________________________________.

Q8. உலகக் கிண்ணக் காற்பந்து ஆட்டத்தைக் காண மக்கள் அரங்கத்தில் திரண்டிருந்தனர்.

மக்கள் அரங்கத்திற்குத் திரண்டு வரக்காரணம், ____________________________

____________________________________________.

Q9. அறிஞர்களால் பல புதிய கண்டுபிடிப்புகள் உருவாக்கப்பட்டன.

பல புதிய கண்டுபிடிப்பகள் உருவாக ____________________________

____________________________________________.

A3 வேற்றுமை உருபுகள் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.

ஒருநாள் குரங்குக் குட்டியின் வீட்டில் நெருப்புப் பிடித்தது. உடனே அச்செய்தி அறிந்து எல்லா மிருகங்களும் ஓடி வந்தன. வீட்டின் (Q10)____________________ (அருகில்) குளத்தில் தண்ணீரை எடுத்து ஊற்றி, நெருப்பை அணைத்தன. ஆனால், முயல் குட்டி மட்டும் உதவி செய்ய வரவில்லை. மற்றொருநாள் முயல் குட்டி ஒரு (Q11)____________________ (வலை) சிக்கிக்கொண்டது. குரங்குக் குட்டியும் மற்ற விலங்குகளும் (Q12)____________________ (முயல் குட்டி) உதவி செய்தன. அப்போதுதான் முயல் குட்டி தன் (Q13)____________________ (தவறு) உணர்ந்து திருந்தியது. அன்று முதல் குரங்குக் குட்டியும் முயல் குட்டியும் நல்ல நண்பர்களாக இருந்தன.

‘ஆ’பிரிவு

B4 கருத்தறிதல் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.

முன்னொரு காலத்தில் தாய்லாந்து நாட்டில் தோட்டக்காரனும் அவன் மனைவியும் இருந்தார்கள். அவன் மிகவும் நல்லவன். அவனைப் போலவே (Q14)__________________ .

ஒருநாள் இரவு அவர்கள் வீட்டிற்குத் துறவி ஒருவர் வந்தார். அவர் (Q15)__________________________ கேட்டார். துறவி தங்கள் வீட்டிற்கு வந்ததைத் தோட்டக்காரனும் அவன் மனைவியும் பெருமையாகக் கருதினர். அதனால், அவர்கள் (Q16)________________________ உணவு படைத்தனர். பிறகு, துறவி தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அவர்கள் செய்து கொடுத்தார்கள்.

கணவனும் மனைவியும் மறுநாள் துறவிக்கு என்ன (Q17)__________________________. அவர்கள் தங்கள் வீட்டில் இருக்கும் ஒரு பெட்டைக்கோழியை வெட்டிக் கறி சமைக்க முடிவு செய்தனர்.

(1) பரிசு வழங்கலாம் என்று கலந்துரையாடினர்

(2) கறி சமைத்து விருந்து அளிக்கலாம் என்று யோசித்தனர்

(3) எனக்கு ஏதேனும் உதவி செய்யுங்கள் என்று

(4) அவளும் நன்கு வரவேற்று உபசரிப்பாள்

(5) தம் பசிக்கு உணவும் அன்றிரவு தங்குவதற்கு இடமும்

(6) அவன் மனைவியும் நல்ல பண்புடையவள்

(7) துறவியை வணங்கி, வரம் கேட்டு

(8) துறவியை அன்போடு வீட்டினுள் அழைத்துச்சென்று

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | 6 |
| Q15 | 5 |
| Q16 | 8 |
| Q17 | 2 |

C5 சுயவிடைக் கருத்தறிதல் (22 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.**

பழங்காலத் தமிழகத்தில் அதியர் என்ற குறுநில மன்னர்கள் புகழ்பெற்று விளங்கினார்கள். அவர்களுள் ஒருவன் நெடுமான் அஞ்சி. சிறந்த கல்வியும் பேராண்மையும் பெற்றவன், கடையெழு வள்ளல்களில் ஒருவன். நெடுமான் அஞ்சி வறுமையால் வாடி வந்த புலவர்களுக்கு ஊணும் உடையும் தந்து ஆதரித்து வந்தான். இவன் ஆடல் பாடல் கலைகளில் சிறந்து விளங்கிய கலைஞர்களுக்குப் பொருளை வாரி வழங்கினான். இவனுடைய அருமை பெருமைகளைக் கேள்வியுற்ற மக்கள் அனைவரும் அதியமான் என்ற குடிப்பெயராலேயே இவனை அழைத்தனர்.

அதியமான் ஒருநாள் அல்ல, இரு நாள் அல்ல, பலநாட்கள் பலமுறை பலரோடு கூடிச் சென்றபோதும், முதல் நாளில் வரவேற்று உபசரித்தது போலவே அகமும் முகமும் மலர உபசரிப்பான் என்று ஔவையார் போற்றிப் பாடியுள்ளார்.

ஒருநாள் அதியமான் வேட்டையாடத் தன் நாட்டிலுள்ள குதிரைமலைக்குச் சென்றான். அம்மலையில் பிளவு ஒன்று இருந்தது. அவ்விடத்தில் அருநெல்லிமரம் ஒன்று இனிய நெல்லிக்கனியைத் தாங்கி நின்றது அதனை உண்டவர் நீண்ட நாள் வாழ்வர் என்று அங்கிருந்த சான்றோர்கள் கூறினர். இதைக் கேள்வியுற்ற அதியமான் அக்கனியை அடைய விரும்பி, மலைமேல் ஏறினான்.

வெகுதூரம் மலை மீதேறி, நெடுநேரத்திற்குப் பின் உச்சியைச் சென்றடைந்தான். கண்டவரை நடுங்க வைக்கும் அப்பிளவில் அருநெல்லிமரம் நிற்பதைக் கண்டான். அஞ்சா நெஞ்சம் படைத்த அதியமான் அருநெல்லிமரத்தில் ஏறி அக்கனியைப் பறித்தான். அவ்வாறு கொண்டு வந்த அக்கனியை ஒரு புறம் வைத்துவிட்டு அவைக்களத்தில் சான்றோர்களோடு உரையாடிக்

கொண்டிருந்தான். அச்சமயத்தில் வாயிற்காவலன் வந்து ஔவையார் வந்திருப்பதை அரசனிடம் தெரிவித்தான். உடனே, அதியமான், "ஔவையாரை அழைத்து வா," என்றான்.

ஔவையார் அவைக்களத்துக்குள் நுழைந்ததும், "வாருங்கள், வாருங்கள்," என்று விரைந்து சென்று வரவேற்றான். பின், "அமருங்கள்," என்று இருக்கையைக் காட்டி அமரச் செய்தான். அதியமான் தான் பெற்ற அரிய நெல்லிக்கனியை ஔவையாருக்கு மனமுவந்து **ஈந்தான்.** அந்த அருநெல்லிக்கனியை ஔவையார் உண்பது கண்டு பெருமகிழ்வுற்றான். அவர் உண்டு முடித்த பிறகே, அக்கனியின் சிறப்பைப் பற்றிக் கூறினான்.

<u>வினாக்கள்</u>

Q18. நெடுமான் அஞ்சியிடம் காணப்பட்ட சிறந்த குணங்கள் எவை ? (4)

Q19. நெடுமான் அஞ்சியை மக்கள் ஏன் அவனுடைய குடிப்பெயரில் அழைத்தனர் ? (3)

Q20. ஔவையார் ஏன் நெடுமான் அஞ்சியைப் பாராட்டினார்? (4)

Q21. நெல்லிக்கனியைப் பறித்து உண்ண எங்கே செல்ல வேண்டும்? (3)

Q22. நெல்லிக்கனியைப் பற்றிச் சான்றோர்கள் கூறிய கருத்து என்ன? (4)

Q23. ஔவையார் அருநெல்லிக்கனியை உண்ட பிறகே அதியமான் அதன் சிறப்பைப் பற்றி ஏன் கூறினான்? (4)

Q24. <u>சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)</u>

<u>பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.</u>

அ. ஊணும் - ______________________________

ஆ. ஈந்தான் - ______________________________

P6
SA 1

P6 HMT Exam Paper -2

தமிழ்நாட்டில் கொண்டாடப்படும்

1. நடக்கும் 2. மிகுந்த 3. பிடித்து 4. அவற்றின் 5. கழுத்தில்

6. ஓய்வு நேரங்களில் வயலின் வாசிப்பான்.

7. பயில்வதற்கு பண வசதி இல்லாததே காரணமாகும். 14

8. உலகக் கிண்ணக் காற்பந்து ஆட்டத்தைக் காணவே ஆகும்.

9. அறிஞர்களே காரணமாவார்கள்.

10. அருகிலிருந்த 11. வலையில் 12. முயல் குட்டிக்கு 13. தவற்றை

14. 6 15. 5 16. 8 17. 2

18. நெடுமான் அஞ்சி சிறந்த கல்வியும், வறுமையால் வாடி வந்த புலவர்களுக்கு உணவும் உடையும் தந்து ஆதரிக்கும் குணத்தையும், ஆடல் பாடல் கலைகளில் சிறந்து திகமும் கலைஞர்களுக்குப் பொருளை வாரி அளிக்கும் நற்குணத்தையும் முதல் நாள் உபசரிப்பது போல் அகமும் முகமும் மலர உபசரிக்கும் நற்குணத்தையும் பெற்றவராகத் திகழ்ந்தார். இவையே நெடுமான்அஞ்சியிடம் காணப்பட்ட சிறந்த குணங்களாகும்.

19. நெடுமான் அஞ்சியின் நற்குனங்களையும் அருமை பெருமைகளைப் பற்றியும் மக்கள் கேள்விப்பட்டதால், மக்கள் அவனை அவனுடைய குடிப்பெயரிலேயே அழைத்தனர்.

20. நெடுமான் அஞ்சி ஒரு நாள் மட்டும் அல்லாமல் பல நாட்கள் பலமுறை பலரோடு கூடிச் சென்றபோதும், முதல் நாளில் வரவேற்று உபசரித்தது போலவே அகமும் முகமும் மலர உபசரிப்பான் என்பதால் ஔவையார் நெடுமான் அஞ்சியைப் போற்றிப் பாராட்டினார்.

21. நெல்லிக்கனியைப் பறித்து உண்ணக் குதிரைமலையிலுள்ள பிளவு ஒன்றுக்குச் செல்ல வேண்டும்.

22. நெல்லிக்கனியை சாப்படுபவர் நீண்ட நாள் வாழ்வார் என்று நெல்லிக்கனியைப் பற்றிச் சான்றோர்கள் கருத்துக் கூறினார்கள்.

23. ஔவையாருக்கு அந்த நெல்லிக்கனியைக் கொடுக்கும் முன்பு அதன் சிறப்பைப் பற்றிக் கூறினால், ஔவையார் அதைச் சாப்பிட இசைய மாட்டார் என்பதால் அவர் அதைச் சப்பிட்டு முடித்தபின் அதியமான் அதன் சிறப்பைப் பற்றிக் கூறினான்.

Q24. சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

அ. உணவு
ஆ. கொடுத்தான்

# P6 HMT
# TESTPAPER 1

Name: ________________ Marks /40
Class: ________________ Duration: 50 mins

## கட்டுரை

இப்பிரிவில் இரண்டு தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும் வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும் கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்து எடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம்.

1. உன் பள்ளியில் நடந்த பரிச்ளிப்பு விழாவைப் பற்றி எழுது.

2. மழை தொடர்ந்து ஐந்தாவது நாளாகப் பெய்து கொண்டிருந்தது. பள்ளி முகாமில் இருந்த எங்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கவலை அதிகரித்துக்கொண்டே வந்தது. திடீரென்று கூடாரத்தின் உள்ளே .... ...........